# புகை-அற்ற ஒன்டேரியோ சட்டம் 2005
## எவ்வாறு இச்சட்டம் பாதிக்கிறது : புகையிலை வியாபாரிகளை

## அடிப்படைகள்

- புகை-அற்ற ஒன்டேரியோ சட்டம் (SFOA) மே 31, 2006 அன்று அமலுக்கு வருகிறது.
- இச்சட்டம் ஒன்டேரியோவின் தொழிலாளர்களையும், பொது மக்களையும் மறைமுகப் புகையின் (Second-hand smoke) இடர்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு, உள்ளடக்கப்பட்ட வேலையிடங்கள் மற்றும் உள்ளடக்கப்பட்ட பொது இடங்களில் புகை பிடித்தலை தடை செய்கிறது.
- புகையிலைப் பொருட்களை விளம்பர காட்சிக்கு வைப்பதை இச்சட்டம் தடை விதிக்கும். மே 31, 2008-க்குள் இத்தடை முழுதாக அமலில் இருக்கும். இளைஞர்கள் புகை பிடிக்க துவங்குவதைத் தடுப்பதும், ஏற்கெனவே புகைப் பிடித்தலை விட்டுவிட்டவர்கள் தொடர்ந்து புகை பிடிக்காமலேயே இருக்க உதவுவதுமே இச்சட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

## புகையிலை வியாபாரிகள்

அடிப்படையாக இளைஞர்களைக் கவராத சில சிறப்பு புகையிலைப் பொருட்களை சில வியாபாரங்கள் விற்பதை சுகாதார முன்னேற்ற அமைச்சகம் அறிந்துள்ளதால், புகையிலை வியாபாரிகள் சில்லறை விளம்பரகாட்சிக்கு வைப்பது மீதான தடை உத்தரவிற்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## சில்லறை வியாபாரிகள் விள்ம்பர காட்சிக்கு வைப்பதற்கு தடை

- புகையிலைத் தயாரிப்புக்களை விற்பனைப் பிரிவு மேஜையின் மீது விளம்பர காட்சிக்கு வைப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.
- வாங்குவதற்கு முன்னரே சிகரெட்டுகளையோ அல்லது மற்ற பிற புகையிலைத் தயாரிப்புக்களையோ உபயோகிக்க வாடிக்கையாளர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.
- மே 31, 2006-லிருந்து மே31,2008 வரை சிகரெட்டுகள் தனித்தனி பாக்கெட்டுகளாக மட்டுமே காட்சிக்கு வைக்க வேண்டும். கார்டன்களை காட்சிக்கு வைப்பது அனுமதிக்கப் படமாட்டாது.
- மே 31, 2008-அன்றிலிருந்து புகையிலைத் தயாரிப்புகள் எதுவும் காட்சிக்கு வைக்கப்படக்கூடாது.

சில்லறை வியாபாரி விற்பனை செய்யும் சிறப்பான புகையிலைப் பொருட்களின் (உதாரணம்., சிகார், பைப்பு, ஹ்யூமிடார்) சதவிகிதத்தின் அடிப்படையில் புகையிலை வியாபாரியை இச்சட்டம் வரையறைக்கிறது. முந்தைய பன்னிரண்டு மாதங்களில் புகையிலைப் பொருட்களின் மொத்த விற்பனையில் குறைந்தது 50 சதவிகிதமாவது சிறப்பு புகையிலைத் தயாரிப்புக்கள் இருந்தால், சில்லறை வியாபாரி ஒருவர், தன்னை புகையிலை வியாபாரியாக சுகாதார முன்னேற்ற அமைச்சகத்துடன் பதிவு செய்துகொள்ளமுடியும். சில்லறை வியாபாரி ஒரு ஆண்டிற்கும் குறைவாகத்தான் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தால், அவரின் மொத்த சரக்கு வாங்கல் பட்டியலில், குறைந்தது 50 சதவிகிதமாவது சிறப்பு புகையிலைப் பொருட்களைக் கொண்டிருக்க வேண்டும். சிறப்பு புகையிலைப் பொருட்களில் சிகரெட்டுகள் அடங்காது.

பதிவு செய்து கொண்டபின், புகையிலை வியாபாரி கீழ்கண்டவற்றிற்கென அனுமதிக்கப்படுகிறார் :

- விற்பனை பிரிவு மேஜையின் மேல் *சிறப்பு புகையிலைப் பொருட்களை* விளம்பர காட்சிக்கு வைக்கலாம்
- மே 31, 2008 அன்று புகையிலைப் பொருட்களின் பொதுவான காட்சிக்கு வைப்பது மீது தடை அமலுக்கு வந்த பின்னும் *சிறப்பு புகையிலைப் பொருட்களை* காட்சிக்கு வைக்க இயலும்.
- வாங்குபவர்கள் *சிறப்பு புகையிலைப் பொருட்களை* வாங்குமுன்னரே அவற்றை கையாள அனுமதிக்க இயலும். மத்திய அரசாங்க புகையிலைச் சட்டம் (பிரிவு11), இப்பழகத்தின் மீது தடை விதித்திருப்பது கவனத்திற்குரியது, எனவே புகையிலை விற்பவர்கள், இன்னமும் அந்த சட்டதுக்கு இணங்கத்தான் வேண்டும்.
- சிறப்பு புகையிலைப் பொருட்களில் சிகரெட்டு அடங்காது.

SFOA-வின் அனைத்துப் பிற நிபந்தனைகளும் புகையிலை வியாபாரி ஒருவருக்குப் பொருந்தும். இவற்றில் புகையிலைப் பொருட்களை மேம்படுத்துவது மீதான கட்டுப்பாடுகள் மற்றும் காட்சி வரிசைக்குத் தேவையான அடையாளக் குறிகள் (தயவு செய்து தீழே பார்க்கவும்) போன்றவை அடங்கும்.

## நான் ஒரு புகையிலை வியாபாரியாக எவ்வாறு பதிவு செய்து கொள்வது ?

ஒரு புகையிலை வியாபாரியாக பதிவு செய்துகொள்வதற்கான விண்ணப்ப படிவங்கள் சுகாதார முன்னேற்ற அமைச்சக வலையகத்தின் கீழ்க்கண்ட முகவரியிலிருந்து கிடைக்கும் http://www.mhp.gov.on.ca/english/health/smoke_free /legislation.asp

## பதிவு செய்யப்பட்ட புகையிலை வியாபாரிகளின உரிமையாளர்களின் கடமைப் பொறுப்புக்கள்

சில்லறைக்கடை வியாபாரிகளான அனைத்து உரிமையாளர்களும், இந்த சட்டம் மற்றும் விதிமுறைகளுக்கு முழுவதுமாக இணங்க வேண்டும். இவற்றில் கீழ்க்கண்டவை அடங்கும்:

- வாடிக்கையாளர்களை தங்கள் வியாபார இடங்களினுள் வர, வெளியேயிருந்து அல்லது உட்புற பொதுவான பகுதிகளிலிருந்து அனுமதித்தல் அதாவது வாடிக்கையாளர்கள் தயாரிப்பாளர் இடத்தை அல்லது ஒரு சுங்க வரி-அற்ற சில்லறை வியாபாரி கடைக்கு மற்றோரு கடையிலிருந்து நுழைய முடியாது.
- புகையிலை வியாபாரியின் சில்லறை விற்பனைக்கடை ஒரு பொது வழியாக இருக்கக்கூடாது. உதாரணமாக, ஒரு வாடிக்கையாளர் வெளியேயிருந்து கடையினுள் வரலாமே அன்றி, மற்றோரு கடை அல்லது ஷாப்பிங் மாலுக்கு இக்கடையில் புகுந்து உட்புறத்திலுள்ள பொதுவான பகுதிக்கு செல்ல இயலக்கூடாது.
- 19 உயதுக்கும் குறைவானவர்களுடன் குறைந்தது 19 வயதானவர்கள் வந்தாலே ஒழிய புகையிலை வியாபாரியின் சில்லறைக் கடைக்குள் வர அனுமதிக்கக்கூடாது. ஒருவர் 25 வயதுக்கும் குறைவானவராக இருப்பது போல் தோன்றினால் அவரது அடையாள அட்டையை காண்பிக்குமாறு புகையிலை வியாபாரி அவரை கேட்க வேண்டும். அதன் மூலம் அவர் குறைந்தது 19 வயதுடையவராக இருப்பதை உறுதி படுத்திக்கொள்ள வேண்டும்.

## எனது கடை என் வாடிக்கையாளர்களுக்கான ஒரு சிகார் புகைக்கும் ஒய்விடமாக வேலை புரிகிறது. எனது வாடிக்கையாளர்களை இன்னமும் என் கடையில் சிகார் புகைக்க அனுமதிக்கலாமா?

ஒரு புகையிலை வியாபாரியின் கடை “உள்ளடக்கப்பட்ட பொது இடமாக” புகை-அற்ற ஒன்டேரியோ சட்டத்தின் கீழ் கருதப்படுவதால், புகை பிடித்தல் இங்கு தடை செய்யப்பட்டுள்ளது.

## சிகரெட்டுகள் மற்றும் மற்ற பிற புகையிலைப் பொருட்கள் முன்னேற்றம் மீதான கட்டுபாடுகள்

ஒரு குறிபிட்ட பிராண்டின் புகையிலைத் தயாரிப்பை பிரதிபலிக்கும் எந்த விற்பனை ஊக்குவப்பு பொருளும் தடைசெய்யப்பட்டுள்ளது. தடைசெய்யப்பட்டுள்ள விளம்பர காட்சிக்கு வைப்பது பற்றி சில உதாரணங்கள்:

- குறிப்பிட்ட பிராண்டுகளுடன் தொடர்புடைய அலங்கார முகப்புகள் மற்றும் பின்புறத் திரை வைத்தல் (வழக்கமாக இவை "பவர் வாள்" எனப்படுகின்றன)
- பின் புறத்திலிருந்து வெளிச்சமளிக்கும் அல்லது விளக்கு அலங்காரம் செய்யப்பட்ட முகப்புக்கள்
- வியாபார ஊக்குவிப்பு விளக்கு அலங்காரம்
- மூன்று பரிமாண காட்சிப்பொருட்கள்

புகையிலைப் பொருட்களின் விற்பனையைக் குறிப்பிடும் அடையாளக் குறிகள், சில்லறை வியாபாரிகள் புகையிலைப் பொருட்களை விற்பதையும் அப்பொருட்களின் விலையையும் மட்டுமே வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிக்க அனுமதிக்கப் படுகிறது. மேலும் :

- அடையாளக் குறியின் அளவு 968 சதுர சென்டிமீட்டரைத் தாண்டக் கூடாது.
- விற்பனைக்குறிகள் வெள்ளைநிறப் பின்னணியில் கருப்பு எழுத்துக்களில் இருக்க வேண்டும்.
- ஒரு குறியில் தோன்றும் வாசகம் கடைக்கு வெளியிலிருந்து தெரியக்கூடாது.
- சில்லறை வியாபாரி ஒருவர், புகையிலை பொருட்கள் மற்றும்/அல்லது புகையிலைத் தயாரிப்பு துணைப்பொருட்களை குறிக்கும் உயர்ந்த பட்சம் மூன்று அடையாள குறிகளை மட்டுமே காட்சிக்கு வைக்க முடியும்.
- புகையிலை அல்லது புகையிலைத்-தொடர்பான தயாரிப்பின் ஒரு குறிப்பிட்ட பிராண்டை அடையாளக் குறிகள் அடையாளம் காட்டக்கூடாது.

*தேவையான அடையாளக் குறிகள்*

*நோ ஸ்மோகிங் (புகை பிடிக்கக்கூடாது)* குறிகளை அனைத்து நுழைவு வாயில்கள், வெளியேறும் வழிகள், கழிப்பிடங்கள் மற்றும் மற்ற பிற பொருத்தமான இடங்களில், புகை பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளதை அனைவரும் அறியும் வண்ணம் ஒட்டி வைக்கவேண்டும். மேலும், புகையிலைப் பொருட்களின் அனைத்து சில்லறை வியாபாரிகளும் விற்பனை செய்யுமிடத்தில் வாங்குபவர் தெளிவாக பார்க்கக்கூடிய வகையில் கீழ்க்கண்ட விளம்பரங்களை வைக்க வேண்டும்.

- ஒரு வயதுக் கட்டுப்பாடு மற்றும் உடல் நல எச்சரிக்கை குறி.
- ஒரு அரசு ஐடி (அடையாள) குறி.

தேவையான அடையாளக்குறிகளை பெறுவதை பற்றிய தகவலுக்கென தயவு செய்து உங்கள் உள்ளூர் அரசு சுகாதாராப்பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.



Ontario

## அமலாக்கம்

உள்ளூர் அரசு பிரிவுகள், சட்டத்தை அமல் படுத்தும் பொருட்டு, புகையிலை வியாபாரியின் சில்லறைக் கடைகள் தொடர்பாக சோதனைகளை நடத்துவதுடன் குற்றச் சாட்டுகளையும் விசாரிக்கும்.

## அபராதங்கள்

தனி நபர் ஒருவருக்கு, முதல் குற்றத்திற்கென உயர்ந்தபட்ச அபராதமாக $4,000 மற்றும் மூன்றாவது மற்றும் அதற்கும் மேற்பட்ட குற்றங்களுக்கென $100,000 உயர்ந்தபட்ச அபராதமாக விதிக்கப்படும். கம்பனிகள், முதல் குற்றத்திக்கு $10,000 மற்றும் மூன்றாவது அல்லது அதற்கும் மேற்பட்ட குற்றங்களுக்கு உயர்ந்த பட்சமாக $1,50,000 அபராதம் விதிக்கப்படும்.

இந்த தகவல் தாளை ஒரு விரைவு நோக்கீட்டு உபயோகத்திற்கென மட்டுமே பயன் படுத்த பரிந்துரைக்கப் படுகிறது. கூடுதல் தகவலுக்கென, தயவு செய்து உங்கள் உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

கட்டணமற்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டும்  நீங்கள் தகவல் பெறலாம்.

- **INFOline** 1-866-396-1760
- **TTY** 1-800-387-5559

வேலை நேரம் : திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை.

புகை அற்ற ஒன்டேரியோ சட்டம் பற்றிய கூடுதல் தகவலுக்கென, தயவு செய்து சுகாதார முன்னேற்றத்திற்கான ஒன்டேரியோ அமைச்சக வலையகத்திற்கு வருகை தாருங்கள்: http://www.mhp.gov.on.ca/english/health/smoke_free/legislation.asp.

மே 2006



Ontario